In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.11/2021 Prosecution witness P.W.2
Name: Alagarsamy Calling:
Father Name: Religion:
Village: Caste:
Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.08.2023
**(Accused is present. )**

முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரத்தில் வசித்து வருகிறேன். டிராக்டர் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். அசா1 எனது தம்பி கிருஷ்ணமூர்த்தியின் மனைவி ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவரும் முத்துலாபுரத்தைச் சேர்ந்தவர். 17.5.2020ம் தேதி பகல் 2.30 மணியளவில் நான் வத்தலக்குண்டில் இருந்து பைக்கில் எங்கள் ஊரான முத்துலாபுரம் வந்து கொண்டிருந்தேன். அப்போது முத்துலாபுரம் சாவடி அருகே நான் வந்து கொண்டிருந்தபோது எதிரி சங்கிலி பைக்கில் நான் வேகமாக வருகிறேன் என சத்தம் போட்டார். தேவடியா மகனே, அவிசாரி மகனே என அசிங்க அசிங்கமாக பேசினார். உடனே நான் எங்க வீட்டிற்கு சென்று எங்கள் வீட்டில் இருந்த என் அம்மா, அப்பா, என் தம்பிகள், என் தகப்பனார், என் தம்பி மனைவி ஆகியோர்களிடம் சொன்னேன். அதற்கு அவர்கள் ஏன் உன்னை இப்படி பேசினான், வா போய் கேட்போம் என 2.45 மணியளவில் நாங்கள் அனைவரும் எதிரி வீட்டிற்குச் சென்றோம். நான், என் அம்மா, அப்பா, என் தம்பி கிருஷ்ணமூர்த்தி, அலெக்ஸ், கிருஷ்ணமூர்த்தியின் மனைவி கற்பகம், என் மனைவி பூபதி ஆகியோர்கள் எதிரி வீட்டிற்கு சென்றபோது எதிரி வீடு சாத்தி இருந்தது. நாங்கள் சத்தம் போட்ட உடன் எதிரி வீட்டிற்குள் இருந்து வந்தார். எதிரி எங்களை பார்த்து ஏய் மறுபடியும்

இங்கு வந்து விட்டீர்களா என்று சொல்லி வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்து வந்து என் தம்பி கிருஷ்ணமூர்த்தியை இடது பக்க நெஞ்சில் குத்தி விட்டார். பின்னர் இடது நெஞ்சிற்கு கீழ் உத்தியால் 2 வது குத்து குத்தினார். உடனே என் தம்பி மயங்கி விழுந்து விட்டான். உடனே அந்த இடத்தில் இருந்த வினோத்குமாரும், என் தம்பி அலெக்சும் காயம்பட்ட கிருஷ்ணமூர்த்தியை பைக்கில் வைத்து வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். மருத்துவர் பார்த்து போகும் வழியிலேயே என் தம்பி இறந்துவிட்டதாகச் சொன்னார். என் அப்பாவும் என் கொழுந்தியாள் அசா1ம் மருத்துவமனை வந்துவிட்டு 6 மணிபோல் பட்டிவீரன்பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் சாபொ.1 கத்தியைக் கொண்டுதான் எதிரி அன்றைய தினம் என் தம்பியை குத்தினார். மறுநாள் என் தம்பியின் பிரேதத்தை மருத்துவமனையில் இருந்து என்னிடம் ஒப்படைத்தார்கள். போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.28 17:54:10 +0530

Principal District Judge,
Dindigul.